**செய்தி வெளியீடு எண்: 88/2023** **நாள்: 02.08.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முதல் RMZ ஒன் பாரமவுண்ட், போரூர் வரை தனியார் வாகன இணைப்பு சேவை**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் ராஜேஷ் சதுர்வேதி, தொடங்கி வைத்தார்**

சென்னை, போரூர் RMZ ஒன் பாரமவுண்ட் வளாகத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பாஸ்ட் ட்ராக் நிறுவனத்துடன் இணைந்து RMZ ஒன் பாரமவுண்டில் பணிபுரிவோரின் போக்குவரத்து நலன் கருதி அவர்களுக்கான தனியார் வாகன இணைப்பு சேவை தொடங்கப்பட்டது. இந்த சேவையை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் ராஜேஷ் சதுர்வேதி, (அமைப்புகள் மற்றும் இயக்கம்) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, RMZ ஒன் பாரமவுண்டின் மூத்த துணைத் தலைவர் ஜூலியன் பிரதீப் பிரான்சிஸ், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பாஸ்ட் ட்ராக் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மெட்ரோ பயணிகள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக பல்வேறு இணைப்பு சேவைகளை மெட்ரோ இரயில் நிலையங்களில் வழங்கி வருகிறது. இந்நிலையில், RMZ ஒன் பாரமவுண்ட் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் நலன் கருதி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஃபாஸ்ட் டிராக் நிறுவனத்துடன் இணைந்து அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முதல் RMZ ஒன் பாரமவுண்ட், போரூர் வரை தனியார் வாகன இணைப்பு சேவையை தொடங்கியுள்ளது.

குளிரூட்டப்பட்ட 18 இருக்கைகள் கொண்ட இரண்டு (2) ஃபாஸ்ட் டிராக் வேன்கள் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரையிலும், மாலை 5.30 மணி முதல் இரவு 10.30 மணி வரையிலும், அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ இரயில் நிலையம் முதல் RMZ ஒன் பாரமவுண்ட், போரூர் இடையே தோராயமாக 12 கி.மீ நீளத்திற்கு, சாலை போக்குவரத்து நெரிசலின் அடிப்படையில் 15 முதல் 30 நிமிடங்களில் இயக்கப்படும். ஃபாஸ்ட் டிராக் மொபைல் அப்ளிகேஷன் மூலம் பயணிகள் இந்த வசதியை பயன்படுத்திக்கொள்ளலாம். ஒரு பயணத்திற்கு ஒரு நபருக்கான கட்டணம் ரூ.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ கனெக்ட் சேவையைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், பயணிகள் தங்கள் பயண நேரத்தை கணிசமாகக் குறைக்கலாம், போக்குவரத்து நெரிசல்கள் மூலம் பயணிப்பதால் ஏற்படும் மன அழுத்தத்தைத் தவிர்க்கலாம், மேலும் புத்துணர்ச்சியுடனும், வரவிருக்கும் நாளுக்குத் தயாராகவும் தங்கள் இலக்குகளை அடையலாம். இந்த சேவையை RMZ ஒன் பாரமவுண்ட் நிறுவனத்தில் பணியாற்றுபவர்கள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

**@cmrlofficial** **Chennai Metro Rail** **@chennaimetrorail**

**@ChennaiMetroRail** **www.chennaimetrorail.org**